## *புனித அல்போன்ஸ் லிகோரி (1696-1787)*

இவருடைய தாய் பக்தியுடையவள் இளம் வயதில் இருந்தே இவரது உள்ளத்தில் பக்தி உணர்ச்சிகளை அவள் ஏற்படுத்தினாள். இவர் புத்தித் திறமைப் படைத்தவர். 16ஆம் வயதில் சட்டக் கல்வியில் தேர்ச்சி பெற்று வக்கீல் வேலை பார்த்து வந்தார். ஒரு வழக்கில் இவர் தோல்வியடைந்ததிலிருந்து உலகின் மீது இவருக்கு இருந்த பற்று அகன்றது. உலகத்தை துறந்து குருவாக தீர்மானித்தார். பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது எனினும் குருப்பட்டம் பெற்று தம்மை அர்ச்சித்து அநேக இடங்களில் திருப்பணி புரிந்து ஏராளமான பாவிகளை மனந்திருப்பினார். திவ்விய நற்கருணை மீதும், தேவதாய் மீதும் இவருக்கு மிகுந்த பக்தியுண்டு. இரட்சகர் சபை என்னும் ஒரு புதிய சபையை ஏற்படுத்த கடவுள் இவரை அழைத்தார். கைவிடப்பட்ட பாவிகளை மீட்பதே அச்சபையின் முக்கிய நோக்கம். இச்சபையை ஏற்படுத்துவதில் எண்ணமுடியாத துன்பங்களும் தோல்களும் ஏற்பட்டன. இறுதியாக அதை ஏற்படுத்தி உறுதிப்படுத்தினார். இச்சபையானது அவருக்கு மகிமையையும் கிரீடமும், அதே சமயத்தில் சிலுவையாகவும் இருந்தது. இவரை ஒரு மறைமாவட்டத்தின் ஆயர் ஆக்கினார்கள். 19 ஆண்டுகளாக இவர் திறமையாக ஆண்டு வந்தார். மறைமாவட்டத்தில் ஏராளமான வேலைகள் இருந்தன. தொடங்கிய சபையிலும் ஏராளமான வேலைகள். எனினும் அவர் அநேக சிறந்த நூல்களை எழுதியிருக்கிறார். இவ்வளவு வேலைகளை எப்படிச் செய்ய முடியும் என்று அநேகர் அதிசயித்தனர். ஒரு நிமிடத்தை முதலாய் வீணாக்குவதில்லை என்று இவர் கடவுளுக்கு வாக்களித்தார். அதன்படி நடந்தார். அதனால்தான் இவர் இவ்வளவு வேலைகள் செய்ய முடிந்தது. குரு மடங்களையும் சந்நியாச மடங்களையும் சீர்திருத்தினார். பொது நிலையினருக்குப் போதித்தார். ஏழைகளுக்கு உதவி செய்தார். தீய பெண்களை விரட்டி விட்டார். “அனுமதிக்கப்பட்ட சுகங்கள் அனைத்தையும் அனுபவிக்க விரும்புகிறவன் சீக்கிரம் விலக்கப்பட்ட இன்பங்களையும் தேடத் தொடங்குவான். அநேக காரியங்கள் நமக்கு வர எதற்காக அனுமதிக்கிறார் என்று அறிவோமானால் அவை உண்மையாகவே வரப்பிரசாதங்கள் என தெளிவாகக் காண்போம். எதிர்ப்புகள், நோய், ஆன்ம வறட்சி, உள்ளத்திலும், உடலிலும்நோவு இவை அனைத்தும் கடவுள் கையில் உளி போல் ஆகும். அதைக் கொண்டு அவர் பரகதியில் வைப்பதற்கான சுருபங்களைச் செதுக்கிறார்”. இவை புனித அல்போன்ஸ் லிகோரியாரின் பொன்மொழிகள். இறுதி நாட்களில் நோயினால் துன்னபப்பட்டு தனது 91-ஆம் வயதில் இறையடி சேர்ந்தார்.

**சிந்தனை:**

“பழத்தை தேடுகிறவன் மரத்தை அணுகவேண்டும். இயேசுவைத் தேடுகிறவன் மரியாளிடம் போக வேண்டும் மரியாளைக் கண்டுபிடிக்கிறவன் உறுதியாக இயேசுவை அடைவான்”. (புனித அல்போன்ஸ் லிகோரி)

**செபம்:**

புனித அல்போன்ஸ் லிகோரியாரே, நாங்கள் உம்மைப் போல் ஒவ்வொரு வினாடியையும் நன்கு பயன்படுத்தும் வரம் பெற்றுத்தாரும்.